**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8092374

1. District : தூத்துக்குடி மாவட்டம் | PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி காவல்நிலையம் | Year: 2019 ஆண்டு | FIR No.: 10/2019 மு.த.அ. எண் | Date: 24.10.2019 நாள்

2. (i) Act சட்டம்: Cr.P.C — Sections பிரிவுகள்: 102 r/w
(ii) Act சட்டம்: P.C Act, 1988 as Amended in 2018 — Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 23.10.2019 ம் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு தேதி மாலை 18.15 மணிக்கு முன்பாக | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2019 | Time : நேரம் 07.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2019 | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 45 கி.மீ தென் கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி — ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருச்செந்தூர் மற்றும் திரு.க.சுடலை என்பவரின் 1/424-2, குறிஞ்சி நகர், வீரபாண்டியபட்டணம் என்ற வீடு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.சு.நாகசுப்பிரமணியன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் | (g) Address : முகவரி — விமான நிலைய நில எடுப்பு அலகு-2, துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1.)திரு.க.சுடலை, வயது 50/2019, த/பெ கந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருச்செந்தூர் (2.)திரு.N.ரஞ்சித்குமார், (ஒப்பந்ததாரர்) வயது37/2019, த/பெ நயினார், எண்.22, அம்பேத்கர் தெரு, தோப்பூர் திருச்செந்தூர், (3.)திரு.க.லெட்சுமணபெருமாள், (ஒப்பந்ததாரர்) வயது 42/2019, த/பெ கனகராஜ், 6/171, மேற்கு தெரு, கட்டாரிமங்கலம், தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr.R.Authees Rank Inspr. to take up the Investigation / Refused investigation / transferred to PS .......................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/10/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
திரு.ஜா.ஹெக்டர் தர்மராஜ்,
காவல் துணை கண்காணிப்பாளர்
Name: ஊ.த.(ம). க.துறை. ..........
Rank: தூத்துக்குடி 24.10.2019. எண் ..........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி, நேரம் 24.10.2019 at 09.00 hrs

தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 10/2019, பிரிவு **102 Cr.P.C r/w 7 of PC Act, 1988 as Amended in 2018.**

**Accused :**

1. Tr.K.Sudalai, aged 50/2019
   S/o Tr.Kandan,
   Block Development Officer
   (Block Panchayat)
   Tiruchendur Panchayat Uion,
   Tiruchendur,
   Thoothukudi District.

**Private Individual :**

2. Tr.N.Ranjith Kumar, aged 37/2019,
   S/o.Tr.Nainar,
   No.22, Ambedkar Street,
   Thoppur, Tiruchendur,
   Thoothukudi District.
   (Contractor)

3. Tr.K.Lakshmanaperumal,
   aged 42/2019,
   S/o Tr.Kanagaraj,
   6/171, West Street,
   Kattarimangalam,
   Thoothukudi District.
   (Contractor)

பணிந்தனுப்பப்படுகிறது :-

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலர் திரு.க.சுடலை மற்றும் ஊழியர்கள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து தீபாவளி மாமூல் மற்றும் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளான பிளான் அப்ருவல், பிளாட் அப்ருவல், புதிய வீடுகளுக்கு வரிவிதிப்பு செய்தல் மற்றும் பணிகளுக்கு லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 23.10.2019-ம் தேதி 18.15 மணி முதல் 24.10.2019-ம் தேதி அதிகாலை 03.00 மணி வரை திரு.சு.நாகசுப்பிரமணியன், தனி வட்டாட்சியர், விமான நிலைய நில எடுப்பு அலகு-2, துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அவர்களுடன் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் தனி வட்டாட்சியர் / துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு.சு.நாகசுப்பிரமணியன் அவர்கள் கொடுத்த புகார் மனுவை 24.10.2019-ம் தேதி நான் அலுவலக பணியில் இருந்தபோது காலை 07.00 மணிக்கு பெற்று காலை 07.30 மணிக்கு தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 10/2019, பிரிவு 102 Cr.P.C r/w 7 of PC Act, 1988 as Amended in 2018–ன் படி மார்ஜினில் கண்ட மூன்று எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் சு.நாகசுப்பிரமணியன், தனி வட்டாட்சியர், விமான நிலைய நில எடுப்பு அலகு-2, துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி.

அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. தூத்துக்குடி திருச்செந்தூர் ரோட்டின் கீழ்புறம் மேற்கு நோக்கி அமைந்துள்ள திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் இரகசியமாக 23.10.2019-ம் தேதி மாலை 15.00 மணி முதல் 18.15 மணி வரை கண்காணித்ததில் திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலர் திரு.க.சுடலை மற்றும் ஊழியர்கள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து தீபாவளி மாமூல் மற்றும் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளான பிளான் அப்ருவல், பிளாட் அப்ருவல், புதிய வீடுகளுக்கு வரிவிதிப்பு செய்தல் மற்றும் பணிகளுக்கு லஞ்சம் பெறுவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 23.10.2019 மாலை 18.15 மணி முதல் தூத்துக்குடி திருச்செந்தூர் ரோட்டில் அமைந்துள்ள திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை தணிக்கை செய்ததில் மேற்படி அலுவலகத்தின் உள் நுழைந்தவுடன் இடதுபுறம் அமைந்துள்ள அறையில் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.க.சுடலை, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) என்பவரின் இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இரண்டு கத்தையாக இருந்த மொத்தம் ரூ.56,000/-ம், மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் அலுவலக அறையில் அலுவலக நேரம் முடிந்த பின்பும் நின்று கொண்டிருந்த ஒப்பந்ததாரர் திரு.ந.ரஞ்சித்குமார் என்பவரின் மேல் சட்டை மற்றும் பேண்ட் பாக்கெட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.42,000/-ம், மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்திற்குள் பின் பகுதியில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை உதவி செயற்பொறியாளர் உட்கோட்ட அலுவலகத்திற்குள் இளநிலை வரைதொழில் அலுவலர் திருமதி.முத்து என்பவரது இருக்கைக்கு எதிரில் அமர்ந்திருந்த திரு.க.லெட்சுமணப்பெருமாள் என்பவரின் சட்டை மற்றும் பேண்ட் பாக்கெட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.11,000/-ம் ஆக மொத்தம் ரூ.1,09,000/-ம், மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.க.சுடலை என்பவரை விசாரித்தபோது அலுவலக பணிகளை செய்வதற்காக பல்வேறு ஒப்பந்ததாரர்கள் ஏற்கனவே கொடுத்த பணத்தை வீரபாண்டியபட்டணம், குறிஞ்சி நகரில் கதவு எண் 1/424-2 உள்ள அவரது வீட்டில் பீரோவில் வைத்துள்ளதாகவும் அவரை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றால் மேற்படி பணத்தை ஆஜர் செய்வதாகவும் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி பணத்தை காலம் தாழ்த்தாமல் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் தூத்துக்குடி தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் தனி நீதிமன்றம் அவர்களுக்கு பிரிவு 157(1) கு.வி.மு.ச படி வேண்டுகோள் கடிதம் தங்களால் அனுப்பி வைக்கப்பட்டு

அதன் அடிப்படையில் ஏற்கனவே வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.க.சுடலை என்பவர் வாக்குமூலத்தில் கூறியபடி பீரோவிலிருந்து S.N.கோபால் ஜுவல்லர்ஸ், 1/143, வடக்கு ரத வீதி என்று அச்சிடப்பட்ட கைப்பையுடன் ஆஜர் செய்த ரூ.1,15,080/-ஐ கைப்பற்றி என்னிடம் ஒப்படைத்த பணமும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,24,080/- பணத்திற்கு அவர்களிடம் உரிய விளக்கம் கேட்க அவர்களின் விளக்கம் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் இல்லாததாலும், மேற்படி பணம் அலுவலக பணிகளுக்காக கையூட்டாக பெற்ற மற்றும் கொடுப்பதற்கான பணம் என்று சந்தேகப்படும்படியாக இருந்ததாலும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஏற்கனவே ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்று வீட்டில் வைத்துள்ளதாக அவரே வாக்குமூலமாக தெரிவித்ததாலும் மேற்படி பணத்தை 23.10.2019 மாலை 18.15 மணி முதல் 24.10.2019 அதிகாலை 01.30 மணி வரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மற்றும் பின் இணைப்பு 1 முதல் 3-ன் படியும், 24.10.2019-ம் தேதி அதிகாலை 02.00 மணி முதல் 03.00 மணி வரை தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் மற்றும் பின் இணைப்புபடியும் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி அலுவலகத்தில் தணிக்கையின்போது இருந்த பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தனிநபர்களிடம் இருந்த பணத்திற்கு அவர்கள் தெரிவித்த விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருந்தவற்றிற்கான பணம் மட்டும் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு கணக்கு காட்ட முடியாத பணம் வைத்திருந்த திரு.க.சுடலை, வட்டார வளர்ச்சி அலுவலர், திரு.ந.ரஞ்சித்குமார், ஒப்பந்ததாரர் மற்றும் திரு.க.லெட்சுமணப்பெருமாள், ஒப்பந்ததாரர் ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொண்டு இத்துடன் செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,24,080/- மற்றும் பின் இணைப்புகள் 1 முதல் 3 வரையும், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் பின் இணைப்பும் மற்றும் செயல்முறைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் படி கைப்பற்றப்பட்ட ஆவணங்களையும் தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd/- சு.நாகசுப்பிரமணியன், 24.10.19, தனி வட்டாட்சியர், விமான நிலைய நில எடுப்பு அலகு-2, துணை ஆய்வு குழு அலுவலர் நிலையில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம். Sir, Received the complaint on 24.10.2019 at 07.00 hrs, I am registering a case in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.10/2019, U/s 102 Cr.P.C r/w 7 of PC Act, 1988 as Amended in 2018 on today (24.10.2019) at 07.30 hrs Sd/- 24.10.19, G.Hector Dharma Raj, Deputy Supdt. of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.சு.நாகசுப்பிரமணியன் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வைத்து தயார் செய்த

செயல்முறைகள் மற்றும் பின் இணைப்பு – 1 முதல் 3, கைப்பற்றுதல் மகஜர் மற்றும் பின் இணைப்பு, திரு.க.சுடலை என்பவரது வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக ஆய்வாளர் திரு.R.ஆதீஸ், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்கள் வசம் ஒப்படைக்கிறேன்.

(ஜா.ஹெக்டர் தர்மராஜ்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
தூத்துக்குடி பிரிவு. 24.10.2019.